# தமிழ் நாடு தகவல் ஆணையம்

காமதேனு கூட்டுறவு சிறப்பங்காடி முதல் தளம், புது எண் 378, அண்ணா சாலை,
தேனாம்பேட்டை, சென்னை-600018. (தபால் பெட்டி எண் 6405 தேனாம்பேட்டை)
தொலைபேசி எண் 24312841.

**வழக்கு எண். 10423/விசாரணை/2009**

**<u>விசாரணை நடைபெற்ற நாள். 25.9. 2009</u> (திருவண்ணாமலை)**

| | |
|---|---|
| **முன்னிலை** | **திரு தி சீனிவாசன், எம்.எஸ்சி.**<br>**மாநில தகவல் ஆணையர்.** |
| **மனுதாரர்:** | திரு ஆர் பாலகிருஷ்ணன்<br>220, ரோடு தெரு, நம்பேடு கிராமம் & அஞ்சல்<br>போலூர் தாலுகா, திருவண்ணாமலை மாவட்டம். |
| **பொது அதிகார அமைப்பு:** | பொதுத் தகவல் அலுவலர்<br>வட்டார வளர்ச்சி அலுவலர் அலுவலகம்<br>சேத்துப்பட்டு ஊராட்சி ஒன்றியம்,<br>சேத்துப்பட்டு, திருவண்ணாமலை மாவட்டம்.<br><br>மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பஞ்சாயத்து)<br>மாவட்ட ஆட்சியர் அலுவலகம்<br>திருவண்ணாமலை |

***

மனுதாரர் திரு ஆர் பாலகிருஷ்ணனும், பொது அதிகார அமைப்பின் சார்பாக பொதுத் தகவல் அலுவலர், சேத்துப்பட்டு ஊராட்சி ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலரும், திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியரின் நேர் முக உதவியாளர் (பஞ்சாயத்து) அவர்களும் இன்று (25.9.09) இவ்வாணையத்தால் திருவண்ணாமலையில் நடத்தப்பட்ட விசார**ணைக்கு வந்திருந்தனர்.**

மனுதாரர் 4.3.09 அன்று 5 இனங்களில் தகவல்கள் கேட்டு சேத்துப்பட்டு ஊராட்சி ஒன்றியத்தில் மனு செய்துள்ளார். 20.3.09 அன்று உரிய தகவல்கள் வழங்கப்படாமல் தகவல்கள் அளிக்க இயலாது என்று மனுதாரருக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மனுதாரர் 31.3.09 அன்று மாவட்ட ஆட்சியருக்கு மேல் முறையீடு செய்துள்ளார். 22.4.09 அன்று மனுதாரருக்குத் தகவல்கள் அனுப்பப்பட்டுள்ளன. மனுதாரருக்கு உரிய தகவல்கள்

கிடைக்காததால் 4.5.09 அன்று ஆணையத்திற்கு மேல் முறையீடு செய்த மனு இன்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

விசாரணையில் மனுதாரர் 23.9.09 அன்று ஒரு சில தகவல்கள் கொடுக்கப்பட்டதாகவும், முழுத் தகவல்கள் கிடைக்கப்பெற வில்லை என்றும் தெரிவித்தார். ஒவ்வொரு இனமாக விசாரிக்கப்பட்டது. இனம் 4 க்கு புகார் மனு குறித்து தகவல்கள் வழங்கப்படவில்லை என்றும், இனம் 5 க்கு ஒரு குறிப்பிட்ட நபர் மீது புகார் மனு அளிக்கப்பட்டது குறித்த தகவல் வழங்கப்படவில்லை என்றும் விசாரணையில் தெரியவந்தது. இது குறித்து பொதுத் தகவல் அலுவலர் சம்பந்தப்பட்ட வட்டார வளர்ச்சி அலுவலரிடமிருந்து உடனடியாகத் தகவல் கிடைக்காததால் தகவல் வழங்கப்படவில்லை என்று தெரிவித்தார். விசாரணையில் இனம் 4 மற்றும் 5க்கு தகவல்கள் இருப்பது குறித்தும் தகவல் இல்லாதது குறித்தும் எந்த வித கருத்தும் பொதுத் தகவல் அலுவலரால் தெரிவிக்கயியலவில்லை.

இது குறித்து கீழ்க்கண்ட ஆணை பிறப்பிக்கப்படுகிறது

மனுதாரர் கேட்ட இனம் 4 மற்றும் 5க்கு உரிய தகவல்களை இவ்வாணை பெறப்பட்ட 15 தினங்களுக்குள் அளித்து அதன் விவரத்தினை ஆணைத்திற்குத் தெரிவிக்குமாறு பொதுத் தகவல் அலுவலர், சேத்துப்பட்டு ஊராட்சி ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலகம் அவர்களுக்கு ஆணையிடப்படுகிறது.

மனுதாரரின் மனுவிற்கு சுமார் 6 மாதம் கால தாமதம் ஆகியும் இது வரை தகவல் வழங்கப்படாதற்கு சம்பந்தப்பட்ட பொதுத் தகவல் அலுவலர் மீது தகவல் பெறும் உரிமைச்சட்டத்தின் பிரிவு 20 (1) ன் கீழ் ஏன் நடவடிக்கை எடுக்கக்கூடாது என்பதற்கு விளக்கம் கேட்டு அவ்விளக்கத்தினை இவ்வாணயத்திற்கு இவ்வாணை கிடைத்த 30 நாட்களுக்குள் அனுப்பி வைக்குமாறு மாவட்ட ஆட்சியர், திருவண்ணாமலை கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

**மாநில தகவல் ஆணையம்**

**ஒப்புதல் அளிக்கப்பட்ட நாள் 15.9.09**
**ஆணையத்தின் ஆணைப்படி**

**உதவிப் பதிவாளர்**

மாவட்ட ஆட்சியர்,

திருவண்ணாமலை

மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பஞ்சாயத்து)
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்
திருவண்ணாமலை

பொதுத் தகவல் அலுவலர்
வட்டார வளர்ச்சி அலுவலர்  அலுவலகம்
சேத்துப்பட்டு  ஊராட்சி ஒன்றியம்,
சேத்துப்பட்டு,
திருவண்ணாமலை மாவட்டம்.

திரு  ஆர்  பாலகிருஷ்ணன்
220,  ரோடு தெரு,
நம்பேடு கிராமம் & அஞ்சல்
போலூர் தாலுகா,
திருவண்ணாமலை மாவட்டம்.